**மாவட்ட உரியமையியல் நீதிமன்றம், சீர்காழி**

**அசல் வழக்கு எண்.126/2017**

2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 ம் நாள் செவ்வாய்க்கிழமை என்பவரது சாட்சியாகிய இன் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி P.ரங்கேஸ்வரி, B.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி சீர்காழி(முழு கூடுதல் பொறுப்பு) அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 11.102022 | தந்தை/கணவர் பெயர் | ஷேக்அலாவுதின் |
| பெயர் | தில்சாத்பேகம் (PW-1) | தாலுக்கா | சீர்காழி |
| கிராமம் | துளசேந்திரபுரம் | சமயம் | |
| சாதி | | வயது | 41 |
| தொழில் | | | |

**<u>முதல் விசாரணை 11.10.2022</u>**

நான் இவ்வழக்கின் 1-ம் வாதி ஆவேண். எனக்கு வழக்கு விபரம் தெரியும், முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நிரூபணபிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

12.12.2011 தேதியிட்ட 'அ ' அட்டவணை சொத்தைப் பொறுத்து எனது பெயரில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.12.2011 தேதியிட்ட 'ஆ ' அட்டவணை சொத்தைப் பொறுத்து 2ம் வாதி பெயரில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.09.2016 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து வாதியில் பெயரில் ஏற்பட்ட கணினிவழி சிட்டா தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.